1551

ARYA DHARMAM
TAMIL WEEKLY.

REGD. No. M. 2913

ஆர்யதர்மம்.

சந்தா விபரம்.	
[தபால் சிலவுள்பட]	
ஜீவிய சந்தா ...	ரூ. 50
ஒரு வருஷ சந்தா ...	ரூ. 3
ஆறுமாத சந்தா ...	ரூ. 1½
தனிப்பிரதி ஓரணா	
மாதிரிப்பிரதிக்கு எழுதவும்	

வியாழந்தோறும் வெளியாகும்

ஆசிரியர்:- அக்நிஹோத்ரம் கோபாலதேசிகாசாரியார்.

स्वस्ति प्रजाभ्यः परिपालयन्तां न्याय्येन मार्गेण महीं महीशाः ।
गोब्राह्मणेभ्यश्शुभमस्तु नित्यं लोकास्समस्तास्सुखिनो भवन्तु ॥

விளம்பர விகிதம்.	
ஒரு முழுப்பக்கம் ஒரு தடவை	ரூ. 20
அரைப்பக்கம் ஒரு தடவை	ரூ. 1[illegible]
ஒருபத்தி ஒரு தடவை	ரூ. 8
இஞ்சு 1-க்கு ஒரு பத்திக்கு ஒரு தடவை	அணா 8
நீண்டகால விளம்பரங்களுக்கு தனி சார்ஜ்.	

பு—25 | கும்பகோணம் பிரமாதி-ளு தை-மீ 19உ 1940 ளு பிப்ரவரி-மீ 1உ | லக்—5

வர்ரக்குறிப்புகள்

(ஸ்ரீவத்ஸ வே. ஸோ. சர்மா)

யுத்தத்தில் தேவதையாம்! மஹா பாரத யுத்தத்தில் அர்ஜுனன் தன் பாணத்தின் முன் சென்றுக்கொண்டிருந்த தேவதை யார் என்று பகவானைக்கேட்டார். இன்று பின்னிஷ் துருப்பு முன்னே ஓர் தேவதை தோன்றுகிறதாம்.

அ[illegible] பசிக்கு [illegible] உயா பலி!! [illegible] இறந்தவரில்லை என்பது பாரத நாட்டுப்பழமொழி! நவநாகரீகத்தால் அது தலைகீழாக மாற்றப்பட்டது. திருச்சியில் ஒருவர் தன திரு குழந்தைகளுக்கும் மனைவிக்கும் விஷமளித்து தானும்நஞ்சுண்டு இறந்தார். கல்விக்காக மூதாதை சொத்துக்களை இழந்தோம்! உத்யோகமோ குதிரை கொம்பு! ஏழைகளுக்கு உதவுபவர் இல்லை! தர்மமோ மறக்கப்பட்டது!! நாகரிக பேய் பல பலி வாங்கும்.

எத்தனை ஆக்ஷேபம்!! ஓர் சுதந்திரதினம் கொண்டாட தலைவர் தலைகீழாக நின்றனர். பத்திபத்தியாக எழுதினார்கள். ஏற்கனவே தேசிய ஸபையிடம் பொது மக்களுக்கிருந்த அன்பு குறைந்து விட்டது. ஜின்னா ஓர்புறம் அன்று எவரும் அதில் கலக்காதீர் என உத்திரவிட்டார். சுபாஷும் அவர் சீடரும் வாசகம் தப்பென உத்கோஷிக்கின்றனர். எப்படியோ பகீரதப்ரயத்நம் செய்து நடத்திவிட்டனர். நிருபர் சொற்படி பத்திரிகைகளும் பெரிதாக்கி எழுதிவிட்டன. பலஹீனத்தை மறைக்க முடியுமா?

என்ன காரணம்? சண்டை வந்த பின் ஜின்னா பெயர் மிக அதிகமாக அடிபடுகிறது. ஆனால் எக்காரணம் பற்றியோ உதவி இந்தியா மந்திரி அவரை அலக்ஷ்யம் செய்து விட்டார். லண்டன் டைம்ஸ் பத்திரிகையும் அவர் வாதத்தைத் தாக்குகிறது. ஏதோ விஷமமிருக்கிறது.

என்ன செய்யப்போகிறது? ஹிந்து தத்வ தார்மிக ஸமாஜமென்று ஒ[illegible] ஸபை சேலத்தில் ஆரம்பிக்கப்பட்டது. வைதிக தர்மாபிமானி ஸ்ரீ ஒய். கெ. சேஷய்யர் போன்றவர் தலைவரில்லாததால் அதன் செயல் எத்தகையதென விளங்கவில்லை. அதர்ம கார்யத்திலீடுபடாதிருந்தால் போதும்.

யார் கண்ணைத்துடைக்க! இந்திய ஸபையில் மைனாரிடி நன்மைகளைக் காக்க அவர்களைக் கலந்து சீர்திருத்தமளிக்கும் படி ஒருவர் ஒருமசோதா தயாரிக்கிறார். கார்யத்தில் இது எவ்வளவு பயனளிக்கும்?

காந்திக்குப் பூ சுத்துகிறார்! வைச்ராய் எப்படியாவது தேசிய ஸபை மந்திரி பதவி ஏற்க வைத்து உலகத்தவர் முன்னே இந்தியாவில் குறையே இல்லை, என்பதைக் காட்ட முயற்சிக்கிறார்.

ஸிந்து மந்திரி ராஜிநாமா! இரு இந்திய மந்திரிகள் ரா[illegible] செய்து [illegible] கக்ஷியில் சேர்ந்தனர். பலமில்லாவிடினும் பழைய மந்திரிகளே நிர்வாஹத்தை நடத்தப்போகிறாராம்.

உடனே செய்க! அகவிலை ஏறுதிருக்க அரசாங்கம் கமிட்டி ஆர்ப்பாட்டம் செய்கிறது. விளம்பரத்திற்கேற்ற காலமில்லை இது.

புதிய வரியா? இந்திய அரசாங்கம் லாபத்தில் பகுதி எனக்கென ஓர் வரி விதிக்க தீர்மானித்து விட்டது.

சுயேச்சை தினம்

காந்தீயர்களுக்கும் தீவ்ர வாதிகளுக்கும் சச்சரவு

ஜனவரி 26உ யன்று சுயேச்சை தினம் இந்தியாவில் பலவிடங்களிலும் கொண்டாடப்பட்டது. டேராடூன் போன்ற அனேக விடங்களில், காந்தியர்களுக்கும், தீவ்ரவாதி காங்கிரஸ்காரர்களுக்கும் கூட்டங்களில் சச்சரவு நடந்ததாகத் தெரிகிறது. புதுமாதிரியான வாசகத்தை நீக்கி பழைய பிரதிக்ஞையையே எடுத்துக்கொண்டார்கள். சர்க்கா சுதர், தீண்டாமைவிலக்கு முதலிய நிர்மாணத்திட்ட பிரதிக்ஞையை அநேக காங்கிரஸ் வாதிகள் அங்கீகரிக்கவில்லை.

ஜின்னா கோரிக்கை நிராகரிக்கப்பட்டது

"விசாரணை நடத்தமுடியாது"

ஜனாப் ஜின்னா, காங்கிரஸ் மந்திரிகள் மீது சாட்டியுள்ள குற்றங்களைப்பற்றி விசாரிக்க வேண்டுமென்றும், அதற்காக ஒரு ராயல் கமிஷன் கூட வேண்டுமென்றும் சொல்லி வந்தார். வைஸ்ராய் விசாரணை நடத்த உடன்படுவாரென்று எதிர்பார்க்கப்பட்டது. [illegible] இதைப்பற்றி கேட்கப்பட்ட ஒருகேள்விக்கு உதவி இந்தியா மந்திரி பதில் அளிக்கையில் ஜின்னா கேட்டபடி விசாரணை செய்ய பிரிடிஷ் கவர்ன்மெண்டார் ஸம்மதிக்கமுடியாதென்றும், அந்த விசாரணையினால் இன்னும் அதிக சச்சரவே உண்டாகுமென்றும் கூறினார்.

தமிழ் நாட்டில் ஹிந்து மஹா ஸபை கூட்டம்

ஸ்ரீ ஸவர்க்கார் வருவார்

வருகிற மார்ச்சு மாதத்தில் சேலத்தில் ஹிந்து மஹா ஸபை மஹாநாடு கூட்டப்படுமென்றும் அதற்கு மஹாஸபைத்தலைவர் ஸ்ரீமான் விநாயக் தாமோதரஸவர்க்கார் வருவாரென்றும், சென்னை ஹிந்து ஸபைத் தலைவரான ஸ்ரீமான் டாக்டர் வரதராஜுலு நாயுடு வெளியிட்டிருக்கிறார். சேலம், கும்பகோணம் முதலானவிடங்களில் மஹாஸபைக் கிளை ஸ்தாபிக்கப்பட்டது.

காந்தி—வைஸ்ராய் சந்திப்பு

பிப்ரவரி 5உயன்று டில்லியில் வைஸ்ராயைக் கண்டு பேசுவதற்காக ஸ்ரீமான் காந்தி 4உயன்று வார்தாவை விட்டு டில்லிக்குப் புறப்படுவாராம்.

குழந்தைகளுக்கு கட்டு முதலியரோகங்கள் பலவிதசெயற்கை ஆகாரத்தினால்தான்.
சிறு குழந்தைகளுக்கு தாய் பால் தான் இயற்கையான உத்தம உணவு.

पयस्या. PAYASYA [Regd.] பயஸ்யா

தாயின் பாலை மிகுதியாக வளர்க்கிறது.

கிடைக்குமிடம் :—ஆத்ரேய ஆயுர்வேத சாலா.
தென்னூர் ரோடு, திருச்சிறப்பள்ளி.

விலை. ¼ பவுண்டு 1—6—0.
½ பவுண்டு 2—8—0.
(Packing & Postage extra.)

பிராம்மணர்களின் ஜீவனோபாயங்கள்

அவர்கள் செய்யக்கூடிய தொழில்கள், சாஸ்திர விதி விளக்கம்.

டிஸம்பர் மாதக் கடைசியில் டெல்லியில் அகில இந்திய பிராம்மண ஸம்மேளனம் நடைபெற்றது. அதில் தலைமை வஹித்த ஸ்ரீமான் தத்தர் பிராம்மண ஸமூஹத்தின் ஜீவனோபாயங்களைப்பற்றி சாஸ்திரங்களின் கருத்தைத் தெளிவாக எடுத்துக் கூறியிருக்கிறார். பிராம்மணர்களுக்கு சாஸ்திரங்களில் விதிக்கப்பட்டுள்ள ஆறு கர்மங்களுள் அடங்கிய ஜீவனோபாயங்கள் கிடைக்காத ஸந்தர்பங்களில் அவர்கள் வேறு சில தொழில்களால் ஜீவிக்கலாமென்றும், அதனால் பிராம்மண்யத்திற்கு ஹானி ஏற்படுவதில்லையென்றும் மன்வாதி மஹா ரிஷிகள் செய்துள்ள வியவஸ்தைகளை அவர் எடுத்துக் காட்டியுள்ளார்.

இந்த ஸந்தர்ப்பத்தில் நாம் பிராம்மண ஸமூஹத்தின் ஜீவனோபாய விஷயமாக நமது சாஸ்திரங்கள் நிர்ணயம் செய்துள்ள சில முக்யமான விஷயங்களை இங்கு வெளியிடுவது அவச்ய மென்று நினைக்கிறோம். ஏனெனில், பிராம்மணன் தானம் வாங்கியே பிழைக்கவேண்டியவனென்றும், தர்ப்பையில் பேர்வழியென்றும், வேறு பிழைப்பு வழி கிடையாதென்றும் அனேகர் பிரமித்துப் பேசிவருகிறார்களல்லவா? இது அபத்தமென்பதை விளக்கவேணும். பிராம்மணர் [illegible] ஆர்ஜனம் செய்து ஸ்வதந்திரமாக ஜீவிக்க சாஸ்திரம் வழிகாட்டியிருப்பதை அவர்கள் அறிந்துகொள்ளவேண்டியது அவச்யமாகிறது. மேலும்,

பிராம்மணர்களை தூஷிக்கவும் பரிஹஸிக்கவும் கங்கணம் கட்டி நிற்கும் சில குதர்க்கிகளும், உத்யோகம் முதலிய ஜீவனங்களில் பிரவேசித்துள்ள பிராம்மணர்களைக் கேவலமாகப் பரிஹஸித்து எழுதியும் பேசியும் வருவதை வெகுவாகக் காண்கிறோம்.

தாம், சாஸ்திரப்படி நடக்காத பிராம்மணன் உலகத்துக்கு வர்ணாச்ரம தர்ம சாஸ்திரத்தை உபதேசிக்க என்ன அதிகாரமென்று கேட்கப்படுகிறது.

சாஸ்திரங்கள் பிராம்மணர்களின் ஆசார அனுஷ்டானங்களுக்கு விரோதமின்றி அவர்கள் எந்தெந்தத் தொழில்களைக் கைகொள்ளலாமென்பதைப் பற்றி வெகு தெளிவாகக் கூறியுள்ளதை இந்த தூஷகர்கள் அறிந்தால் இவர்கள் வாய்திறக்க வழியே இருக்காது. ஆஸ்திகர்களாயுள்ளவர்களும் தங்கள் நிலைமையைப் பற்றி அதிருப்தி கொள்ளக் காரணமிராது.

பிராமண தர்மமானது, முக்ய தர்மம், கௌண தர்மம், ஆபத் தர்மம், என்று மூன்று வகையாக சாஸ்திரங்களில், கூறப்பட்டுள்ளது. முக்யமாக விதிக்கப் பட்டு உள்ள தர்மங்களை அனுஷ்டிக்க முடியாத ஸந்தர்ப்பங்களில் கௌண தர்மத்தையும், அதற்கும் முடியாத காலங்களில் ஆபத்தர்மங்களையும் அனுஷ்டிக்கும்படி விதி ஏற்பட்டுள்ளது. தேசம், காலம் ஸாமர்த்யம் முதலிய ஸாதன ஸௌகர்யங்கள் பூர்ணமாக இருந்தாலல்லது முக்ய விதிப்படி தர்மத்தை ஆசரிக்க முடியாது. இந்த கொடிய கலி தாண்டவமாடும் காலத்தில் எவனும் சாஸ்திர விதிப்படி முக்ய தர்மத்தைச் செய்ய ஸாத்ய முண்டா? தேசமும், சரீராதிகளுடைய் ஸாமர்த்யமும் இக்காலத்தில் மிகவும் விபரீதமாய் இருக்கின்றன அல்லவா? இவைகளை நாம் விரிவாக நிரூபிக்க வேண்டியது அவசியமல்ல.

சாஸ்திரங்களில் பிராமணனுக்கு விதிக்கப்டுள்ள ஆறு கர்மங்களில், யாகம் செய்வித்தல், தானம்வாங்குதல் வேதம் கற்றுக் கொடுத்தல் முதலியவைதிகமான தொழிலே பிராம்மணனுக்கு ஜீவனோபாயமாகக்குறிப்பிடப்பட்டுள்ளது. ஆயினும்யாகம்செய்கிறவர் எங்கே? தானம் கொடுப்பவர்யார்? இப்போது ஒன்றுமில்லையே? இந்த நிலைமையில் பிராம்மண ஸமூகம் ஜீவனத்திற்கு என்ன செய்து? முன்காலத்தில், அரசர்களும் பிரஜைகளும், பிராமணர்களின் யோக க்ஷேமங்களை கவனித்து நடத்தி வைத்து வந்தார்கள். இதனால் கவலையற்று பிராம்மண ஸமூஹமானது உலகக்ஷேமார்த்தமான கார்யங்களில் இடுபட்டு ஞானத்தினாலும் தபஸ்ஸினாலும் பிரஜைகளுக்கும், அரசனுக்கும் வேண்டிய ஊழியம் செய்து வந்தார்கள். இப்போது எந்த அரசாங்கமாவது பிராம்மண தர்மத்தை நடத்த உதவி செய்கிறதா? அவர்களுடைய ஜீவனத்திற்கு வழி செய்கிறதா? ஒன்றுமில்லையே! அம்மாதிரி ஸௌகர்யமொன்றையும் செய்து கொடுக்காத நிலைமையில், பிராம்மணாகள் ஸ்வ தர்மத்தை விட்டு விட்டதாகக் குறை கூற ஒருவனுக்கும் உரிமை கிடையாதன்றோ?

இதுமட்டுமில்லை. பிராம்மணர்களிடம் துவேஷமும் அஸூயையும் கொண்டு அவர்களை எல்லாவித கஷ்டத்திற்கும் உள்ளாகும்படி, ராஜாங்கமும், பிரஜைகளில் சிலரும் கட்டுப்பாடாகவே வேலை செய்து வருகையில் பிராம்மணர்கள், மூக்கைப் பிடித்துக் கொண்டு தபஸ்செய்து கொண்டிருக்கவோ, அவர்களுடைய புத்ரகளத்ராதி குடும்பங்கள் பசியால் வாடி பிராணனை இழக்கும்படியோ நமதுசாஸ்திரங்கள் எங்கும் வற்புறுத்தவில்லை. அத்தகைய நிலைமையில் குடும்ப ரக்ஷணத்திற்கான ஜீவனோபாயங்களை அந்த சாஸ்திரங்களே வகுத்துச் சொல்லியிருப்பதுடன், அந்தத் தொழில்களை நடத்துவதால் பிராம்மண்யத்திற்கும் எவ்விதக் குறைவும் நேரிடா தென்று அநுக்ரஹமும் செய்திருக்கின்றன. பிராம்மணன் தினப்படி செய்ய வேண்டிய நித்யகர்மங்களான ஸ்நானம், ஸந்த்யை, ஜபம், ஹோமம், தேவ பூஜை முதலியவைகளைக் கூடிய வரையில், சுருக்கமாகவாவது அநுஷ்டித்து வந்து, அவைகளுக்கு விரோதமின்றி அனேக ஜீவனோபாயங்களை அவலம்பிக்கலா மென்றே நமது சாஸ்திரம் விதித்துள்ளது.

இதைப் பற்றி மனு யாக்ஞ வல்க்யாதி எல்லாஸ்மிருதிகாரர்களும் விக்ஞனேச்வர மாதவாதி ஸகல நிபந்தனகாரர்களும் வெகு ஸ்பஷ்டமாக விசாரம் செய்து நிர்ணயித்திருக்கிறார்கள்.

அந்த சாஸ்திர நிர்ணயம் இன்று நமது பத்திரிகையில் கீழே பிரசுரமாயிருப்பதை யாரும் ஊன்றிப்படித்து உண்மையை அறியவேணும்.

பிராம்மணன், யாகம் செய்வித்தல், வேதம் கற்றுக்கொடுத்தல், நியாயமான பிரதிக்ரஹம் (தானம்) பெறுதல் ஆகிய மூன்று ஜீவனோபாயம் கிடைக்காத காலத்தில், கிருஷி, கோரக்ஷணம், வாணிஜ்யம் அதாவது வியாபாரம், ராஜஸேவை. தனது வித்யையைக்கொண்டு பிழைத்தல், ஆகிய யாவும் அவனுக்கு ஜீவனோபாயங்களாகச் சொல்லப்பட்டிருக்கின்றன. முதலில் ஒரு விஷயம்கவனிக்கத்தக்கது.

அதாவது கலியுக தர்மங்களைக்கூற முற்பட்ட பாராசர மஹர்ஷியானவர் :—

युगे युगे तु ये धर्माः तत्र तत्र च ये द्विजाः ।
तेषां निन्दा न कर्तव्या युगरूपा हि ते द्विजाः ॥

என்று நிர்ணயம் சொன்னார் அதாவது :—

"ஒவ்வொரு யுகங்களிலுமுள்ள தர்மங்களையோ, அந்த யுகத்தில் வாழும் த்விஜர்களையோ நிந்தை செய்யக்கூடாது. ஏனெனில் அந்த த்விஜர்கள் அந்தந்த யுக தர்மங்களை அநுஸரித்து நடக்க வேண்டிய நிர்ப்பந்த நிலைமையிலிருப்பவர்களல்லவா ?"

என்று சொல்லுவதிலிருந்துகலியுகத்தில் யுக தர்மத்தை அனுஸரித்து பிராம்மணர்கள் நிர்ப்பந்தத்தால் ஸ்வதர்மத்தில் தவறி நடந்தாலும் தூஷிக்கத் தக்கவர்களல்லவென்று நிச்சயமாகிறது. கலியில்கூட சக்தியுள்ளவர்கள் ஸ்வதர்மத்தை விடக்கூடாதுதான் ஆனால் பலவழிகளாலும் அசக்தர்களாயுள்ள பிராம்மணிகள் ஸ்வகர்மம் தவறி பரகர்மம் அநுஷ்டித்தாலும் அவர்களை நிந்தை செய்யக் கூடாதென்று ஏற்படுகிறது. யுகத்தின் போக்கினால் அவர்கள் இம்மாதிரி இருக்கும்படி நிர்ப்பந்தமேற்படுகிறதே தவிர அவர்கள்மீது தவறில்லையென்பது பராசரர் கருத்து. இதை மாதவாசாரியரும் உதாஹரணம் காட்டி அங்கு விளக்கியுள்ளார்.

பொதுவாக இந்தச் சலுகை இக்காலத்திய பிராம்மணர்களுக்கு இருந்தபோதிலும் மன்வாதி ரிஷிகள் சாஸ்திர மூலமாக பிராம்மணனுக்கு விதித்துள்ள ஜீவனோபாயங்களையும் கவனிப்பது அவச்யம்.

மனுவானவர் :—

"தனது தொழிலால் ஜீவிக்கமுடியாத பிராம்மணன், தனக்கு அடுத்ததாயுள்ள க்ஷத்திரியன் தொழிலால் ஜீவிக்கலாம், அல்லது அதற்கும் அடுத்த வைச்யத் தொழிலான கிருஷி, கோரக்ஷணம், இவைகளாலும் ஜீவிக்கலாம்"

என்பதை

अजीवंस्तु यथोक्तेन ब्राह्मणः स्वेन कर्मणा ।
जीवेत् क्षत्रिय धर्मेण सह्यस्य प्रत्यनन्तरः । कृषि गो
रक्षमास्थाय जीवेत् वैश्यस्य जीविकम् ॥ 10 80 82

மேலும், மனுவானர் நான்காவது அத்தியாயத்தில் ருதம், அமிருதம், ம்ருதம், ப்ரம்ருதம், ஸத்யாந்ருதம், ஆகிய ஐந்து வகையால் பிராம்மணன்ஜீவிக்கலாமென்று சொல்லுகிறார்.

ருதம் என்பது வயல் முதலியவிடங்களில் தடுக்கப்படாத இடங்களில் கிடைக்கும் தான்யத்தைப் பொறுக்கி ஜீவிப்பது.

அம்ருதம் என்பது வலுவில் யாசகம் கேளாமல் தானாகப் பிறர் கொடுத்துக் கிடைத்த திரவ்யம்.

பிராம்மணர்களின் ஜீவனுேபாயங்கள்.

ம்ருதம் என்பது யாசகத்தினுல் கிடைத்த திரவியம்.

ப்ரம்ருதம் என்பது கிருஷித்தொழில்.

ஸத்யாங்ருதம் என்பது ஸத்யமும், அங்ருதமும் கலந்த தொழிலாகிய வாணிஜ்யம், அதாவது வியாபாரத்தொழிலாகும்.

மேற்கண்ட ஐந்தில் முதலாவதாகிய ருதமென்பது இக்காலத்தில் சாத்தியமில்லை. வயல் வெளி முதலானவைகளில் கிடக்கும் தான்யத்தை பொறுக்கி பிராம்மண ஸமூஹம் அனைத்தும் ஜீவிப்பது ஸாத்யமா? வலுவில் வந்து தானம் செய்யும் தார்மிகர் இக்கலியில் கிடையாதாகையால் இரண்டாவது வழியும் ஸாத்திய மன்று. யாசித்தால் கூட தானம் கொடுப்பவர் இப்போது இல்லையாகையால் மூன்ருவதும் முடியாதது. நான்காவதாகிய கிருஷியைச் செய்ய பிராம்மணனுக்குஸௌகர்யமுண்டு அதுவும் ஐந்தாவதாகிய வாணிஜ்யத்தினுல், அதாவது சாஸ்திரத்தினுல் தடுக்கப்படாத பொருள்களைக்கொண்டு வியாபாரம் நடத்தி ஜீவிப்பதும் பிராம்மணுக்கு இக்காலத்தில் ஸௌகர்யமானதாயிருக்கும் ஆகையால் கிருஷியும் வாணிஜ்யமும் பிராம்மணர்களுக்கு ஜீவனுர்த்தமான தர்மங்களாகு மென்பது நிச்சயமாகிறது.

மேலும் மனு

अद्रोहेणैव भूतानां अल्पद्रोहेण वा पुनः । या वृत्तिः तां समास्थाय विप्रोजीवेदनापदि ॥ (4-2)

என்பதால் பிராம்மணன், பிராணிகளுக்கு த்ரோஹமில்லாததும், அல்லது ஸ்வல்ப த்ரோஹமுள்ளதுமான தொழிலை அவலம்பித்து ஜீவிக்கலாம் என்கிருர். ஸ்வல்பத்ரோஹமுள்ள தொழில்கள் எவையென்ருல் கிருஷி, வாணிஜ்யம், வட்டி வாங்குதல் முதலானவைகளாகும். கிருஷியில் சிறிது பிராணி ஹிம்ஸை இருக்கிறது. வாணிபத்தில் பொய் கலப்பதால் அதிலும் சிறிது த்ரோஹமிருக்கிறது. வட்டி வாங்குவதிலும் சிறிது த்ரோஹமுண்டு. ஆயினும் ஸ்வல்ப த்ரோஹமுள்ள ஜீவனங்களை மனுவானவர் பிராம்மணனுக்கு ஜீவனமாக இதில் விதிப்பது ஸ்பஷ்டமானது.

பிராமணன் பணம் சேமிக்கலாமா?

மனுஸ்மிருதி 4-வது அத்யாயத்தில்,

यात्रामात्रप्रसिद्धयर्थं स्वैःकर्मभिरगर्हितैः । अक्लेशेन शरीरस्य कुर्वीत धनसंचयम् ॥

என்பதால், "பிராம்மணன் தனது வாழ்க்கையை நடத்தவேண்டியதன் பொருட்டு, தனக்கு விதிக்கப்பட்டவைகளும், நிந்திக்கப்படாதவைகளுமான தொழில்களால் பணம் சேமிக்கலா" மென்று விதிக்கிருர்."

இதிலிருந்து பிராம்மணன் பணம் சேமித்து வைத்துக்கொள்ளக்கூடாதென்ற கக்ஷியும் அடிபட்டுப் போகிறது.

பொதுவாகவே பிராம்மணன், தனக்கு மறுநாள் ஜீவனத்திற்கு வேண்டிய அளவு கூட பணம் வைத்துக்கொள்ளக் கூடாது என்ற ஆதாரமற்ற அபிப்பிராயமொன்று எங்கும் பரவி நிற்கிறது. பிராம்மணர்களை தூஷிப்பவர்களுக்கு இக்காலத்தில் இதுவும் ஒரு ஆயுதமாயிருக்கிறது. சாஸ்திரத்தின் உண்மையான நிர்ணயத்தை அறிந்து கொண்டால் இந்த துரபிப்பிராயம் தூர விலகியோடிவிடும்.

மனு, யாக்ஞவல்க்யர் ஆகியவர்கள்

सूल धान्यको वाऽपि कुंभीधान्यक एव वा । त्र्यहैहिको वापि भवेत् अश्वस्तनिक एव वा ।
(ம 4-1)

என்பதால் நான்கு பிரிவு சொன்னுர்கள். அதாவது பிராம்மணன் 12நாளைக்கு வேண்டிய தான்யத்தை சேகரித்து வைத்துக் கொள்ளலாம். அவன், "குஸூல தான்யன்" என்ப்படுவான். ஆறு நாளைக்கு வேண்டிய அனவு வைத்துக்கொண்டால் "கும்பீ தான்யன்" எனப்படுவான். மூன்று நாளைக்கு வேண்டிய தான்யத்தையும் ஒருவன் வைத்துக்கொள்ள்லாம். கடைசியாக அன்ருடம் வேண்டிய அளவுக்கு மேல் தான்யம் வைத்துக்கொள்ளாமலும் ஒருவன் இருக்கலாம். மேற்கண்ட விதிப்படி, பிராம்மணன் பணம் சேமித்து வைக்க சாஸ்திரமிடமளிக்கவில்லையென்று மேலழுந்தவாரியாக பிரமிக்க நேரிடும்.

ஆனுல் மிதாக்ஷரையில், விக்ஞானேச்ரவரும், மாதவாதிகளும், இங்கு வியவஸ்தை கூறியிருப்பதைக் கவனிப்பது அவச்யம்.

மேற்கண்ட விதியானது "யாயாவரன்" என்ற கிரஹஸ்தனுக்கு ஏற்பட்டதேயல்லது எல்லா கிரஹஸ்தனுக்கும் ஏற்பட்டதல்லவென்று நிச்சயிக்கப்பட்டிருக்கிறது. "யாயாவரன்" என்பவன் யாரென்ருல், எப்போதும். தீர்த்தயாத்ரையும், க்ஷேத்திர யாத்ரையும் செய்துகொண்டு புண்யஸ்தலங்களைச் சுற்றிக்கொண்டே இருக்கும் கிரகஸ்தர்களாவார்கள். அவர்கள் சுற்றுப் பிர[illegible] யாலும் அவர்களுக்கு சாச்வதமாக, கிரஹ ஆராம, க்ஷேத்ராதிகள் கிடையாதாகையாலும், அவர்கள் தான்யம் முதலியவைகளை சேகரித்து வைத்துக்கொள்ள முடியாதவர்களல்லவா? அவர்களைப்பற்றியே மேற்கண்ட குஸூலதான்ய, கும்பீதான்யாதி பிரிவுகள் ஏற்பட்டன. அந்த யாயாவரர்கள்தான் மறுநாளைக்குவேண்டிய தான்யம் கூடவைத்துக்கொள்ளக் கூடாதென்று "அச்வஸ்தனிக" என்பதால் கூறப்பட்டதேயல்லது எல்லா கிருஹஸ்தர்களையும் பற்றிய விதியல்ல.

கிரஹஸ்தர்களில், மற்றொரு பிரிவான சாலீனன் என்பவனுக்கு மேற்கண்ட விதி கிடையாது. இதை விக்ஞானேச்வரர் கூறுவதாவது:—

"एतञ्चातिसंयतत्व, यायावरं प्रत्येत्र उच्यते । न ब्राह्मण सामान्याभिप्रायेण ॥
यथाह देवलः—

द्विविधो गृहस्थः, यायावरः, शालीनश्च । तयोर्यायावरः प्रवरः, याजनाध्यापन प्रतिग्रह रिक्थसंचय वर्जनात् ॥

षट्कमाधिष्ठितः प्रेष्यचतुष्पद गृहग्राम धनधान्य युक्तः लोकानुवर्ती शालीनः ॥"

இந்த வாக்யங்களில் யாயாவரனுக்குத்தான் பணம் சேமிக்க அதிகாரமில்லையென்றும், சாலீனனுக்கு ஆறு நித்யகர்மங்களுடன், வேலைக்காரன், தோட்டம், வீடு, நிலம் பணம், தான்யம் இவைகள் வைத்துக்கொள்ளலாமென்றும், அவன் லோகத்தை (ஜனஸமுதாயத்தை) அநுஸரித்து நடக்கவேண்டியவன், [illegible] என்றும், [illegible]தவல ரிஷி சொல்லியிருப்பதை விக்ஞானேச்ரவர் எடுத்துக்காட்டி சாலீனர்களான, கிருஹஸ்தர்கள் பணம் முதலியவை சேமித்துக்கொண்டு கிரஹாராம க்ஷேத்திராதிகளுடன் ஆறு கர்மங்களையும், செய்துகொண்டு நல்ல பிராம்மணர்களாக விளங்கலாமென்று ஸித்தாந்தம் செய்துள்ளார். இந்த மாதிரியே ஆபஸ்தம்ப வியாஸ, பராசராதி ரிஷிகளும் சொல்லியுள்ளார்கள். கலியில் பிராமணன் யாயாவரனுக இருக்கக்கூடாதென்று தடுக்கப்பட்டிருக்கிறது.

"अश्वस्तनिकता तथा';

என்பதால் கலியில் "அச்வஸ்தனிக" என்ற நிலைமை நிஷேதிக்கப்பட்டிருக்கிறது. கலி தர்மங்களைச் சொல்லவந்த பராசரரும்

பிராம்மணர்களும் கிருஷிகளும்

षट्कर्मसहितो विप्रः कृषि कर्म च कारयेत ॥

என்பதால் பிராம்மணன் ஆறு கர்மங்களை அநுஷ்டித்து வருவதோடு கிருஷியையும் ஜீவனத்திற்காக பிறர்மூலம் அநுஷ்டிக்கலாமென்றுவிதித்துள்ளார்

பிராம்மணர்கள் கிருஷிசெய்யும்படி அனேக ஸ்மிருதிகள் அதிகாரம் கொடுத்தன. ஆனுல் விஞ்ஞாநேச்வரர் இதில் முக்யமாக ஓர் வியவஸ்தை சொன்னுர். கிருஷியானது ஹிம்ஸை நிறைந்தது. கலப்பையால் பூமியை உழும்போது கணக்கற்ற பிராணிகள் கொல்லபட்டுப் போகின்றனவாகையால் பிராமணன் கிருஷி செய்யக்கூடாதென்று, காரணத்துடன் தடுக்கப்பட்டிருக்கிறது கிருஷியில், தானே நேரில் செய்வது, பிறரைக்கொண்டு செய்விப்பது, ஆகிய இரண்டு விதமிருக்கிறது. கலியில் கிருஷியை ஆபத்கால தர்மமாக ஆச்ரிக்கும்படி எல்லா ரிஷிகளும் அநுமதி கொடுத்திருக்கிருர்கள். மற்ற யுகங்களில் பிறரைக்கொண்டு செய்விப்பது ஆபத்தர்மமாகும். கலியிலோ பிறரைக்கொண்டு செய்விப்பது முக்யதர்மம். தாமேநேரில் செய்வது ஆபத்தர்மம், என்று விஞ்ஞானேச்வர்

युगान्तरे कारयितृत्वं आपद्धर्मः, कलौ कारयितृत्वं मुख्यधर्मः । कर्तृत्वं आपद्धर्मः ।

என்ற வாக்யங்களால் நிர்ணயித்தார். ஆதலால் பிராமணன் கலியில் பிறறைக்கண்டு கிருஷிசெய்வித்து ஜீவிப்பது முக்ய தர்மமாகிறது ரொம்ப ஆபத்தில் தாமேநேரிலும் செய்யலாமென்பது நிஷ்கர்ஷம்.

இன்னும் சில ஜீவனவழிகள்

யாக்ஞவல்க்யரும் பிராமணனுக்கு ஆபத்காலத்தில் ஜீவனத்திற்கான சில உபாயங்களைக் குறிப்பிடுவதாவது:-

कृषिः शिल्पं भृतिः विद्या कुसीदं शकटं गिरिः ।
सेवा नृपं नृपो भैक्ष्यं आपत्तौ जीवनानि तु ॥
(2-42)

இதில் 11 உபாயங்கள்சொல்லப்பட்டன (1) கிருஷீ (2) பலவித சிற்ப வேலைகள் (3) சம்பளம் பெற்று ஊழியம் செய்வது (4) வித்யை—அதாவது தான் கற்ற வித்யைக் கொண்டு பிழைப்பது (5) குஸீதம் அதாவது நியாயமான வட்டிவாங்கிப்பிழைத்தல், (6) கூலிக்கு வண்டி கொடுத்துதவுதல் (7) மலையிலுள்ள பொருள்களைக்கொண்டு ஜீவத்தல் (8) ஸேவை—பிறரிடம் ஊழியம் செய்தல் (9) அனுபம் அதாவது தோட்டத்தொழில் (10) அரசன் அதாவது அரசனை அண்டி ஜீவித்தல் (11) பைக்ஷம்—யாசனை. இந்தப் பதினொன்று தொழிலும் ஆபத்காலத்தில் பிராமணன் செய்யக்கூடியவை!

இதில் முக்பமாக வித்யையை ஜீவனுேபாயமாகக் சொல்லியிருப்பதை கவனிக்

(தொடர்ச்சி 7ம் பக்கம் பார்க்க)

परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृतां
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥

ஆர்யதர்மம்
பிரமாதி-௵ தை-௴ 19௳

சீர்திருத்த ஸ்திரீகளின் கிளர்ச்சி

அலஹாபாத்தில் அகில இந்திய ஸ்திரீகளின் கூட்டமொன்று நடந்து மனம்போனபடியெல்லாம் பேச்சும் தீர்மானங்களும் நடந்திருக்கின்றன. சில வருஷங்களாவே சீர்திருத்த ஸ்திரீகள் கூட்டம் போட்டு நமது ஸமூக தர்மங்களையும், ஆசாரங்களையும், வியவஸ்தைகளையும் குலைக்கக் கட்டுப்பாடாக வேலைசெய்துவருவதைப் பார்த்து, விவேகமும், நிதானமும் தீர்க்கதர்சனமும் வாய்ந்த புத்திமான்கள் மிகவும் கவலைப்பட்டுவருகிறார்கள். சீர்திருத்த ஸ்திரீகளின் வரம்பற்ற கிளர்ச்சியினால் தேசத்தில் ஜாதிகுலதர்மங்களுக்கும், குடும்பவ்யவஸ்தைகளுக்கும் பெருத்த ஆபத்து நேர்ந்து அதன்மூலம் தேசமே உருத்தெரியாமல் போய்விடுமோவென்ற அச்சம் எங்கும் தோன்றியுள்ளது.

ஸ்திரீகள், புருஷர்களைப்போல் எதையும் தர்க்கபலத்தினாலும், வாதப் பிரதிவாதங்களாலும் சர்ச்சைசெய்து நிர்ணயித்துக்கொள்ளும் இயல்புள்ளவர்களல்ல. தாங்கள் எதை நம்புகிறார்களோ, அதையே நம்பிக்கையுடன் பிடிவாதமாக ஆசரிக்க முற்படும் உறுதியுள்ளவர்கள். ஆகையால் ஸமூஹக்ஷேமமோ, நாசமோ சீக்கிரத்தில் ஏற்படுவதானால் ஸ்திரீகளின் போக்கே அதற்குக் காரணமாயிருக்கும்.

ஒவ்வொரு ஸமூஹத்தினுடையவும், பரம்பரா தர்மங்களும் ஆசாரங்களும், பழக்கவழக்கங்களும் அந்தந்த ஸமூஹ ஸ்திரீகளாலேயே காப்பாற்றப்பட்டு வருகின்றனவென்பதை ஒருவரும் ஆக்ஷேபிக்கமுடியாது.

சீர்திருத்த ஸ்திரீகளின் கூட்டத்தில், மஹம்மதியர், கிறிஸ்தவர், ஹிந்து, பார்ஸி போன்ற பற்பல ஸமூக ஸ்திரீகள் கூடுகிறார்களல்லவா? இதில் மஹம்மதிய ஸ்திரீகள் மஹம்மதிய ஆசாரங்களையும், கிறிஸ்தவ ஸ்திரீகள் கிறிஸ்தவ ஆசாரங்களையும், புருஷர்களைவிட தீவ்ரமாக ஆசரிக்கக்கூடியவர்கள். ஆகையால் அத்தகையவர்களின் மனதில் விபரீதப்போக்கு ஏற்பட்டுவிட்டால் அந்தந்த ஸமூஹம் சொந்த செல்வத்தில் சீர்குலைந்துபோகத் தடையிராது.

ஆயினும் நல்லவேளையாக சீர்திருத்த ஸ்திரீகளுடன் கோடிக்கணக்கான மத்யவகுப்பு குலஸ்திரீகளும், பாமர ஸ்திரீகளும் கலக்காதது ஆறுதலையளிக்கும். சீர்திருத்த ஸ்திரீகளின் கோஷ்டியில் ஸர் பட்டம் பெற்றவர்களின் மனைவிகளும், பெரிய உத்யோகஸ்தர்களின் பெண்டாட்டிகளும், வேறுபல ஆடம்பரக்காரர்களின் மனைவி மக்கள்தான் கலந்து வருவதைப்பார்க்கிறோம்.

ஆடம்பரமான வஸ்திரங்களையும், ஆபரணங்களையும் அணிந்து அழகு செய்துகொண்டு, மோட்டார்கார்களில் ஆர்ப்பாட்டமாக இந்த ஸ்திரீகள் வந்திறங்கி, இத்தகைய கூட்டங்களில் தமாஷாகப் பேசிவிட்டால் மட்டும் போதுமா? காங்கிரஸ் வாதிகளாவது சிலர் தியாகம் செய்தும் ஆடம்பரத்தை வெறுத்தும் உண்மையான மனோபாவத்துடன் பாமர மக்களுக்காக உழைப்பதைப் பார்க்கிறோம். இந்தப்பணக்கார ஸ்திரீகள் இப்படிச் செய்கிறார்களா? பாமர ஸ்திரீகளையும் ஸரிஸமமாக பாவிக்கவேண்டுமென இந்த ஸ்திரீகள் வாய்பேச்சுப் பேசுவதில் என்ன அர்த்தமிருக்கிறது? ஒரு ஸ்திரீயாவது தனது ஆடம்பரத்தைக் குறைத்துக்கொண்டு பாமரர்களுடன் ஸமமாகப்பழகுவதை நாம் காணவில்லை. கேட்டதுமில்லை. அலகாபாத் கூட்டத்தில் ஒரு ஸ்திரீ பேசுகையில், சீர்திருத்த ஸ்திரீகள் கிராமங்களுக்குப்போய் பாமரர்களுடன் ஸரிஸமமாகப் பழகவேண்டுமென்று பேசினாள். ஆனால் இது எவ்வளவு தூரம் அங்குள்ளவர்களால் காதில் வாங்கப்பட்டதென்பது தெரியவில்லை.

ஸமூஹச் சீர்திருத்தப்போன்ற விவாதத்திற்கிடமான விஷயங்களைப்பற்றி இந்தக் கூட்டத்தார் பேசுவதற்கு எவ்வித மதிப்பும் கொடுக்க நியாயமில்லை. இவர்கள் தேசத்திலுள்ள மிகமிகப் பெரும்பான்மையோர்களான ஸ்திரீகளின் பிரதிநிதிகளும் அல்ல, தேச நிலைமையையும், ஸமூஹ நிலைமையையும் உள்ளபடி கிரஹித்து தீர்க்காலோசனையுடன் கார்யம் செய்யக்கூடிய ஆற்றல் அங்கு கூடியிருந்த டாம்பீக ஸ்திரீகளுக்கு இருக்குமென்றும் ஒருவரும் நினைக்கமாட்டார்.

இந்திய ஸ்திரீகளுக்கு இப்போது எவ்விதக் குறையும் இருப்பதாக நிரூபிக்கப்படவில்லை. அந்நிய நாகரிக மோஹத்தால் நமது நிலைமை தாழ்ந்ததுபோல் அவர்கள் நினைத்துகொண்டிருப்பதுதான் இதற்கு காரணம். ஸ்திரீகள் கூட்டம்போட்டு யோஜிக்கவேண்டிய விஷயம் என்ன?

ஹிந்து தர்மத்தில் ஸ்திரீகளுக்கென்று ப்ரத்யேகமாக கவலை யொன்றும் வைக்கவில்லை. அவர்களை உயர்ந்த நிலைமையில் அது வைத்திருக்கிறது. ஸ்திரீகள் கிருஹலக்ஷ்மிகளென்று மனு புகழ்கிறார். வேதமும் நமது ஸ்திரீகளுக்கு விசேஷ கௌரவம் காட்டியிருக்கிறது. அயல்நாட்டு நாகரீகத்தைக்கண்டு நம் ஸ்திரீகள் ஏமாறக்கூடாது. அந்த நாகரீகம் நம் ஸ்திரீகளை அழித்து விடக்கூடியது. நம் தேசத்தை உருவில்லாமல் செய்யக்கூடியது. சீர்திருத்த ஸ்திரீகளுக்கு இந்த அநுபவம் வெகு சீக்கிரத்தில் ஏற்படப்போகிறது. ஆதலால் கற்பரசிகளாகிய குல ஸ்திரீகள் இத்தகைய கூட்டங்களையும், தீர்மானங்களையும் கண்டு கலங்காமல் அவைகளை உதாஸீனம் செய்ய வேண்டியதே கடமையாகும்.

குறிப்புகள்.

கோட்டையூர் மகாநாடு

செட்டிநாட்டிலுள்ள கோட்டையூரில் நடைபெற்ற வர்ணாச்ரமதர்ம, ஆலயஸம்ரக்ஷண விசேஷ மகாநாட்டின் நடவடிக்கை விவரங்கள் சென்றவாரம் நமது பத்திரிகையில் வெளிவந்துள்ளது.

அவ்வூரிலுள்ள ஸ்ரீமீனாக்ஷிசுந்தரேச்வர தேவாலயத்தின் கும்பாபிஷேக ஸமயத்தில் அந்த மஹாநாடு கூட்டப்பெற்றது மிகுந்த பிரயோஜனமுள்ளதாகும். இம்மாதிரி தேவாலய ஸம்மந்தமான உத்ஸவாதி ஸமயங்களில் இத்தகைய மஹாநாடு கூட்டுவதை எங்கும் வழக்கத்திற்குக் கொண்டுவருவது மிகவும் விரும்பத்தக்கது.

கோட்டையூர் மஹாநாடு ஸகலஅம்சத்திலும் விசேஷமுள்ளதாயிருக்கிறது. தனவணிக ஸமூஹத்தினர் சிறந்த ஆஸ்திகர்கள். தென்னிந்திய தேவாலயங்கள் அழிந்துபோகாமல் காப்பாற்றிவரும் கைங்கர்யமானது அந்த ஸமூஹத்தினரின் ஏகதேசமான செய்கையாயிருந்து வருகிறது. அந்த ஸமூஹத்தினர் சிரத்தை கொள்ளாவிடில் தென்தேசத்தில் எவ்வளவோ உயர்ந்த ஆலயங்கள் இன்று தரைமட்டமாகி புல், பூண்டு. முள், முளைக்கும் இடமாயிருக்கும். அத்தகைய உத்தம கைங்கர்யத்தில் இடுபட்டுள்ள அந்த ஸமூஹமானது தேவாலயங்களின் சுத்தியைக்கார்க்க முன்வருவது இயற்கையே ஆயினும், அனர்த்தம் ஆரம்பிக்கும் காலத்திலேயே அந்த ஸமூஹத்தினர் கட்டுப்பாடாக எதிர்க்க ஆரம்பித்திருந்தால் ஆலயப்பிரவேசச் சட்டத்தின் கதியே வேறுவிதமாக மாறியிருக்குமென்று நாம் நினைக்கிறோம்.

கோட்டையூர் மஹாநாட்டில் ஆஸ்திக சிரேஷ்டர்களான ஸ்ரீமான்கள், அழகப்ப செட்டியார், சிதம்பரம் செட்டியார் ஸொர்ணநாதன்செட்டியார், சுப்பிரமணியம்செட்டியார் ஆகிய கனவான்கள் முறையே. வரவேற்புத் தலைவராயும்; கொடியேற்றுபவராயும், மஹாநாட்டுதலைவராயும், திறப்பாளராகவும் இருந்து, வர்ணாச்ரம தர்மத்தை ஆதரித்தும், ஆலயப்பிரவேச அக்கிரமத்தைக்கண்டித்தும் பேசியுள்ள ஸாராம்சமுள்ள விஷயங்களை ஆஸ்தீக ஸமூஹம் பொன்னேபோல் போற்றாமலிருக்காது. அக் கனவான்களுடைய ஆழ்ந்த கருத்துக்களடங்கிய சொற்பொழிவானது ஆஸ்திகர்களை மகிழச் செய்கிறது. அது நமது இயக்கத்திற்குப் புத்துயிரும், புதியதைர்யமும், உத்ஸாஹமும் ஊட்டுவதாயிருக்கிறதென்பதில் ஸந்தேஹமில்லை.

மஹாநாடு ஸம்பந்தமான முக்யஸ்தானங்கள் எல்லாவற்றிலும் அந்த சமூஹத்தினரே அமர்ந்து நடத்தியது நம்தேசத்திலேயே புதியஸம்பவமாகத் தோன்றுகிறது. இதற்கு முன் இப்படி நடந்ததில்லை. ஆகவே இது வெகு விசேஷமுள்ள தென்பதில் ஸந்தேகமில்லை. இம்மாதிரியே அந்த ஸமூஹத்திலுள்ள எல்லா ஆஸ்திகர்களும் முன்வந்து தேவாலயங்களைப் பாதுகாக்க முயற்சியெடுக்கவேண்டுமென்பது நமது அபிலாஷை. இம்மஹாநாட்டை நடத்திய ஆஸ்திகர்கள் அந்தநாடு முழுவதும் பெருத்த பிரசாரத்தை ஆரம்பித்து நமது இயக்கத்திற்குப் பேருதவி செய்யக் கோருகிறோம்.

உண்மையற்ற யாதாஸ்து

தென்னிந்திய ஹரிஜனஸேவாஸங்கத்தார் மதுரையில்கூடி, மதுரை ஆலயப்பிரவேச விஷயமாக தங்கள் மனம்போனபடி ஓர் யாதாஸ்தைத் தயாரித்து வெளியிட்டுள்ளார்கள். உண்மையானவிஷயங்களை மறைத்து பாமரமக்களை ஏமாற்றும் முறையில் அதற்கு மேற்பூச்சுக் கொடுத்து அது எழுதப்பட்டிருக்கிறது. மதுரையில் திருட்டுத்தனமாக கார்யம் நடத்த விஷயம் உலகமெங்கும் தெரிந்துவிட்டது.

இவர்கள் எவ்வளவு ஏமாற்றினாலும் ஜனங்கள் ஏமாறமாட்டார்கள். கோவிலில் பிரதான உத்யோகம் வகித்த ஸ்ரீபிரஸாத ராவ் அவர்களின் உண்மைவிளக்கமொன்றே போதுமல்லவா? இப்படியிருக்க பொதுஜனங்கள் ஸம்மதித்துக் கார்யம் நடந்ததாக யாதாஸ்து எழுதுவது முற்றிலும் ஸாஹஸமாகும். காந்தீயர்கள் அச்சமயம் செய்த அளவற்ற அக்ரமங்களையெல்லாம் ஸனாதனிகளின்மீது ஏற்றி யாதாஸ்தில் குறிப்பிட்டிருப்பதும் ஏமாற்றும் வித்தையாகும். இந்த யாதாஸ்திற்கு குப்பைக் கூடையில் உயர்ந்த ஸ்தானம் கொடுப்பதையே பொது ஜனங்கள் விரும்புவார்கள்.

ஆலயப்பிரவேச பிரசாரத்தை நடத்த காங்கிரஸ் கமிட்டிகளெல்லாம் தீவ்ரமாக முன்வரவேண்டுமென்று யாதாஸ்தில் வேண்டிக் கொள்ளப்பட்டிருக்கிறது. ஸனாதனிகளும் இந்த சண்டைக்கு ஈடுகொடுக்கத்தயார். ஏற்கனவே மதிப்பையும், செல்வாக்கையும் இழந்து, பொதுஜன அதிருப்திக்கு ஆளாகியுள்ள காங்ரஸ்ஸானது ஸேவாஸங்கத்தின் அழிவுயோஜனைக்கு இணங்கி கலகம் செய்யமுற்படாதென்று நினைக்கிறோம்.

சுக்கூர் ஹிந்துக்களின் திக்கற்ற நிலைமை

ஸிந்து மாகாணத்திலுள்ள சுக்கூரில் மூர்க்கத்தனம் பிடித்த மஹம்மதியக் கூட்டத்தார், ஹிந்துக்களுக்கு இழைத்துள்ள அநியாயமான பயங்கரமான அட்டூழயங்களின் விவரம் பாய்பரமானந்தர் போன்றவர்களால் வெளியிடப் பட்டிருப்பதைப் பார்த்து ஹிந்து ஸமூஹமே நடுக்க முறவேண்டியிருக்கிறது. 155 ஹிந்துக்கள் கொல்லப் பட்டும், பல கோடி ரூபாய்கள் நாசமடைந்து, வீடுகளும் கடைகளும் கோரமாகச் சூறையாடப் பட்டும் உள்ளதைக் கவனித்தால் அந்தக் கலகத்தின் கோரத் தன்மை எத்தகைய தென்பது விளங்கும். இவ்வளவு பெரிய அக்கிரமம் நடந்தும் தென்னிந்திய பத்திரிகைகள் இச்செய்தியை போதுமான படி பிரசுரிக்காமல் அமுக்கி விட்டன. காங்கிரஸும் இதில் போதிய கவலை செலுத்தவில்லை. காந்திஜியோ அங்குள்ள ஹிந்துக்களை தேசப் பிரஷ்டர்களாகப் போகும்படி உபதேசிக்கிறார்.

அவ்விடத்திலுள்ள ஹிந்துக்கள் அஹிம்ஸையைக் கைக்கொண்டு ஸாத்விகமாக ராட்டினம் சுற்றிக்கொண்டு மஹம்மதிய துஷ்டர்களை வசப்படுத்தவேண்டுமாம். அம்மாதிரி செய்யமுடியாமல்போனால் ஹிந்துக்களெல்லாம் அவ்விடத்தைவிட்டு வெளியேறி வேறு இடங்களுக்கு குடியேறிப் போய்விடவேண்டுமென்று உபதேசிக்கிறார். துஷ்டத்தனம் செய்த மஹம்மதிய வெறியர்களைப்பற்றி ஒரு வார்த்தைகூட காந்திஜீ கண்டித்துப் பேசவில்லை. கஷ்டப்பட்டவர்களுக்கு உதவி செய்ய ஒரு யோஜனையுமில்லை. இந்தியாவின் ஏகதேசத் தலைவராக காங்கிரஸ் வரித்துள்ள காந்திஜீயின் போக்கு எப்படியிருக்கிறது பாருங்கள்!!

துருக்கி பூகம்ப கஷ்டநிவாரண நிதிக்கும், சைனா யுத்த உதவிக்கும் இந்தியாவில் பணம் சேகரிக்கப் பலர் முயற்சிக்கிறார்கள். இது நியாயமாயிருக்கலாம். ஆயினும் நம் தேசத்தில், நம் கண்முன் கஷ்டப்படுவோர்களுக்கு நாம் செய்யும் உதவி என்ன? நமது அடுத்த வீட்டில் நடப்பதென்னவென்பதைக் கவனியாமல், அயல்நாட்டாரைப்பற்றிய கவலை டம்பத்திற்காகவா? அல்லது பிரஸித்திக்காகவா?

ஸிந்து மாகாணத்தைப் பிரிக்கக்கூடாதென்று ஹிந்து ஸமூகத்தினர் ஒரு முகமாக எதிர்த்தனர். காங்கிரஸோ மஹம்மதியர்களின் புன்சிரிப்புக்கு ஆசைப்பட்டு அதைப் பிரிக்க ஆதரவளித்தது. இன்று அங்கு நடப்பதென்ன? ஹிந்துக்கள் திக்கற்ற நிலைமையில் மஹம்மதியர் வசம் சிக்கிக்கொண்டு திண்டாடவேண்டியிருக்கிறது. மஹம்மதியர்களே அதிகமாயிருக்கும் இடத்தில். வேறு மதத்தினரும், பாஷை, ஆசாரமாறுபாடுள்ளவருமான ஹிந்துக்கள் சிறுபான்மையோராகத் தவிக்கவேண்டியிருக்கிறது. துர்பலர்களும், பலிஷ்டர்களும் ஒரேயிடத்தில் எப்படி வாழமுடியும்? மதம், ஆசாரம், மனப்போக்கு ஆகிய எல்லா அம்சங்களிலும் ஒன்றாயிருப்பவர்களேதான் ஒரே இடத்தில் சேர்ந்து வாழமுடியும் அதுதான் தேசத்தில் அமைதிக்கு ஹேதுவாகும்.

மாறுபட்ட மனப்போக்கும், ஆசாரமும் வழக்கமுள்ளவர்கள் அக்கம் பக்கத்தில் சேர்ந்துவஸிப்பதால் நித்யம் கலஹமே ஏற்படும். பலிஷ்டனாயும், ஆள்கூட்டமுள்ளதாயுள்ள ஸமூஹம் தனக்கு எதிரான சிறிய ஸமூஹத்தை நசுக்க முற்படுவதே உலக இயற்கை. சுக்கூர் கலஹமானது ஸிந்துப்பிரிவினையின் பயனாக ஹிந்துக்களுக்கு ஏற்பட்ட பெரிய ஆபத்தென்பதை புத்திமான்கள் ஊஹித்துப் பார்க்கலாம்.

ஸி. ஆர். குதர்க்க வாதம்!

மாஜி, அவசரச்சட்ட மந்திரியான ஸ்ரீமான் ஸி. ராஜகோபாலாசாரியார் தென்னிந்தியாவில் சுற்றி வருகிறார். குறைந்து போன காங்கிரஸ் மதிப்பைத் தூக்கி விடுவதும், காந்திஜீயின் ஸர்வாதிகாரத் தன்மையைச் சாதித்துக்கொள்ளுவதும் இந்த பிரசாரத்தின் நோக்கமாயிருக்கலாம். ஆலயப்பிரவேசப் பிரசாரத்திற்காகத் தாம் வரவில்லையென்று குடந்தைக் கூட்டத்தில் கூறினார், ஆயினும் அவர் போகுமிடங்களிலெல்லாம் ஆலயப் பிரவேசத்தை ஆதரித்துப் பேசாமல் விடுவதில்லை. எல்லாம் பழம் கதையே.

ஆனால் கும்பகோணத்தில் ஓர் புதிய விஷயம் குறிப்பிட்டார். சிதம்பரத்தில் தமக்கு வக்கீல்கள் நடத்திய தேனீர் விருந்தில் தேனீர் குடிப்பதற்காக பீங்கான் பாத்திரம் உபயோகிக்கப்பட்டதாம். இந்த மாதிரி பாத்திரங்களை அசுத்தமென்று கருதி வந்த காலம் போய், இப்போது அவைகளை வைதிகர்கள் கூட உபயோகப் படுத்துவதாயும், ஒருவர் குடித்த பாத்திரத்தில் மற்றொருவர் ஸங்கோசமின்றி குடிப்பதாயும், இவ்வளவு பெரிய ஆசார மாறுதல் ஏற்பட்டபிறகு, ஆலயப்பிரவேசத்தை மட்டும் ஏன் ஆக்ஷேபிக்கவேண்டுமென்றும் அவர் குதர்க்கம் பேசினார்.

ஸ்ரீமான் ஆச்சாரியார் இப்படிப்பேசியது தமாஷா, அல்லது உண்மையாவென்று தெரியவில்லை. புத்திமானாக மதிக்கப்படும் ஸ்ரீமான் ஆசாரியார் இவ்வளவு மட்டமான ஒரு கக்ஷியை உண்மையாகவே பேசியிருந்தால் அது விநோதமானதே.

காலப்போக்கை அநுசரித்து பீங்கானில் குடிக்கும் புதிய வழக்கம் போல், ஆலயப் பிரவேசப்புதுமையும் நியாயமென்று இவர் வாதிக்கிறாரா? காலத்தை அநுஸரித்துப்புதிய வழக்கங்களை அநுஸரிப்பது நியாயமென்றால் ஸ்ரீமான் ராஜகோபாலாசாரியரும், அவரது குருவான காந்திஜியும் காலப்போக்கை அநுசரித்துப்புதிய வழியில் ஏன் போகவில்லையென்று நாம் கேழ்க்கிறோம்.

ஒரு நிமிஷத்தில் லக்ஷக்கணக்கான கஜம் நூல் நூற்றுக்கொடுக்கும் யந்திரங்கள் ஏராளமாக இருக்கும் இக்காலத்தில், காந்திஜி ஏன் சர்க்காவைச் சுற்றச் சொல்லுகிறார்? மெல்லிய, உயர்ந்த, நாநாவிதமான ஆடைகள் வேண்டிய அளவு கிடைக்கும் இக்காலத்தில் காந்திஜி ஏன் முறட்டுக்கதரை கட்டவேண்டும்? கால் சட்டை, கைச்சட்டை, பூட்ஸ், தலைதொப்பி ஆகிய நாகரிக உடுப்பு உலகமெங்கும் பரவியிருக்கையில் காந்திஜி ஏன் முழங்காலுக்கு மேல் ஒரு துண்டு தரிக்கவேணும்? ராஜசக்ரவர்த்தியைப் பார்க்க நேர்ந்தபோது இந்த வேஷத்துடனேயே போனதாக காந்தியர்கள் அதை ஏன் புகழவேணும்? ஸ்ரீ ஸி. ஆர். ஏன் உச்சிக்குடுமி தரிக்கவேணும். உலகமெங்கும் கிராப்பு மயமாயிருக்கிறதே? இவர் தரிக்கும் உச்சிக் குடுமி காரணமாக பிராம்மண ஸமூஹத்திற்கே வசவு கிடைக்கிறதே? இவர் ஏன் கச்சம் கட்டியும் மேல் வஸ்திரம் தரித்தும் ஒரே ஒரு ஷர்ட் அணிந்தும் உடுத்தவேணும்? இந்தக்காலத்திய ரீதியில் ஏன் உடுத்தவில்லை உலக மாறுதலை இவர் அநுஸரிக்காமல் கர்நாடகமாக இருப்பதேன்? பீங்கானில் குடிப்பது போன்ற நாகரீகம் வந்த பிறகு கூட இவரும், காந்தியும் இப்படியிருக்கலாமா? ஒரு துராசாரம் பரவி நிற்பதைப் பார்த்து இன்னும் அதைப்போல் அநேக தப்புகளை செய்ய ஏன் பயப்படவேண்டுமென்று ஸ்ரீ ஸி. ஆர். கேட்பது விவேகிகளுக்கதிசயத்தைக் கொடுக்கும். இது பாமரர்களை ஏமாற்றமட்டுமே உபயோகப்படும்.

P.T பாணீ அண்கோ பிரசுரம்.

பூஜாராமாயணம்	0	1	0
அகிலாண்டேச்வரீ அக்ஷரமலிகா	0	1	6
ஸ்தோத்ரமாலாஸ்துதி மஞ்சரி	0	3	0
கல்பத்ரயம்	0	4	0
விஷ்ணு ஸஹஸ்ரநாமம்	0	4	0
லக்ஷ்மி ,, ,,	0	6	0
லலிதா ,, ,,	0	6	0
சுப்ரமண்ய பூஜாவிதி	0	3	0
யஜுஸ் ஸங்யாவந்தனபாஷ்யம்	0	5	0
திருப்புகழ் பஜனை	0	1	6
ஸ்யாமளா தண்டகம் (நாகரம்)	0	1	0
மயில் விருத்தம் வேல் விருத்தம்	0	1	0
விருத கல்பம்	0	6	0

கிடைக்குமிடம்:– ஸ்ரீஜனார்தந பிரிண்டிங் ஒர்க்ஸ் லிமிடெட், கும்பகோணம்.

ஸ்ரீ லலிதா ஸஹஸ்ர நாமம்

மூலம் நாகரத்திலும், தமிழிலும்,
ஸ்ரீமான் G. V, கணேசய்யர், B.A., B.L.,
எழுதியது.

ஸ்ரீ வித்யை, ஸ்ரீ பாஸ்கரராயருடைய சரித்திரம், ந்ருஸிம்ஹாநந்தநாதர் பரிபாஷா ச்லோகங்கள் முதலியன அடங்கியவை.

ஸ்ரீ அம்பாள், ஸ்ரீ பாஸ்கரராயர்,
ஸ்ரீ சக்ரம் படங்களுடன் கூடியது.

விலை ரூ 4] [தபால் V. P. P. சிலவு தனி.

கிடைக்குமிடம்.– ஸ்ரீ ஜனார்தந பிரிண்டிங் ஒர்க்ஸ் லிமிடெட், கும்பகோணம்.

ராஜாங்கம் அண்ணாவையர்

மகாமகோபாத்தியாய டாக்டர்
உ. வே. சாமிநாதையர்
எழுதியது.

மகாராஷ்டிர அரசர்கள் காலத்தில் தஞ்சாவூரில் நவராத்திரி உத்ஸவம் மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்படுவது வழக்கம். வடமொழி தென்மொழி வித்துவான்களும் சங்கீத வித்வான்களும் வேறு பல கலை வல்லுநர்களும் அந்நகரத்திற்கு வந்து அரசரையும் மற்றவர்களையும் மகிழ்வித்து ஸம்மானங்கள் பெற்றுச்செல்வார்கள். வெளிநாடுகளிலிருந்தும் பலர் வந்து போவதுண்டு.

ஒரு வருஷம் தஞ்சாவூரில் நவராத்திரி விழாவிற்கு வடநாட்டிலிருந்து மல்லர் ஒருவர் தம் பரிவாரங்களுடன் வந்திருந்தார். அவர் பல ஸம்ஸ்தானத்துள்ள மல்லர்களோடு மல் விளையாட்டுப் புரிந்து வெற்றியடைந்து அங்கங்கே பல ஸம்மானங்களும் விருதுகளும் பெற்றவர். அவர் வந்திருக்கிறாரென்பது தெரிந்து தஞ்சாவூருக்கு அருகிலுள்ள கிராமத்தினர் பலர் அவருடைய மல்விளையாட்டைப் பார்க்கும்பொருட்டு வந்து கூடியிருந்தனர். வந்த மல்வீரர் மற்ற இடங்களிலிருந்து வந்திருந்த வேறு மல்லர்களை அறை கூவி அழைத்தார். மற்போர் நடைபெறத் தொடங்கியது. ஏழு நிலைகளையுடைய மாடம் அமைந்த அரண்மனையின் கிழக்கு முகப்பிலுள்ள வெளியில் சுற்றிலும் வாடி (வேலி) கட்டப்பட்டது. அதைச் சுற்றிப் பல ஜனங்கள் நின்றுகொண்டிருந்தார்கள். வாடிக்குள் மல்யுத்தம் நடைபெற்றது. ஒவ்வொரு நாளும் வடநாட்டு மல்வீரரே தம்மோடு போர்புரிந்த மல்வீரர்களை ஜயித்து வந்தார். ஸம்ஸ்தானத்து மல்வீரரும், வேறு மல்லர்களும் ஒவ்வொருவராகத் தோற்றுப்போயினர். அரண்மனையில் இரண்டாவது நிலையிலிருந்து அரசர் ஒவ்வொரு நாளும் இதனைக் கவனித்து வந்தார்.

ஒருநாள் வழக்கம்போல மற்போர் ஆரம்பமாயிற்று. தினந்தோறும் பெற்று வந்த வெற்றியினால் பெருமிதமடைந்த மல்வீரர் அன்று மிகவும் உத்ஸாகத்தோடு இருந்தார். வந்திருந்த கூட்டத்தையும் அந்த வடநாட்டு மல்வீரரது வெற்றி யுத்ஸாகத்தையும் கண்டபோது அரசரது உள்ளத்தே சிறிது வருத்தமுண்டாயிற்று; 'இவரை ஜயிப்பதற்கு நம் ஸம்ஸ்தானத்தில் ஓர் ஆள் இல்லையே,' என்ற எண்ணமே அதற்குக் காரணம். அரசருடைய உள்ளக் குறிப்பை யறிந்த மந்திரிகள் அருகிலிருந்து பல வகையாக அவருடைய கவலையைப் போக்கத் தொடங்கினார்கள்.

"மற்றோர் அரசாங்கமாக இருந்தால் இப்படிப் பிறநாட்டு வீரனுக்கு இடங்கொடுக்குமா? இங்கே மகாராஜா நிஷ்பக்ஷபாதியாகையால் வித்தைக்கு மதிப்புக் கொடுத்திருக்கிறார்கள். அந்த மல்வீரர் எந்த நாட்டினராக இருந்தால் என்ன? நாம் அளிக்கும் ஸம்மானத்தை அவர் மிகவும் உயர்வாகப் போற்றிப் பாதுகாப்பார்" என்றார் ஒருவர்.

"மகாராஜா அதற்குள் மனம் சலிக்க வேண்டாம். இன்னும் நம் ஸம்ஸ்தானத்து வீரர்கள் யாவரும் வரவில்லை. யாரோ சிறு பிள்ளைகள் இவ்வளவு நாள் அந்த வீரரோடு போக்குக் காட்டி விளையாடினார்கள். அவருக்கு உள்ள சக்தி எவ்வளவென்று தெரிந்துகொண்டு பிறகு நாம் போவோமென்று சில பெரிய வீரர்கள் இருக்கிறார்கள்" என்று மற்றொருவர் சொன்னார்.

"இந்த ஸம்ஸ்தானத்தைப் போல இவ்வளவு சிறப்பாகப் பலவகையான வித்தைகளுக்கும் ஆதரவு அளிப்பது வேறொன்றுமில்லையென்று ஜனங்கள் பேசிக் கொள்கிறார்கள். மற்ற இடங்களில் இந்த மற்போரை காணுவது அரிது. ஆதலால் இங்கே வெளியூர்களிலிருந்து பல ஜனங்கள் வந்திருக்கிறார்கள். அவர்கள் எல்லோரும் மகாராஜாவினுடைய பெருமையைப் பற்றித்தான் பேசிக்கொண்டிருக்கிறார்கள்" என்று வேறொருவர் பேசினார்.

அரசரோ மல் விளையாடும் இடத்தையே பார்த்துக் கொண்டிருந்தார். திடீரென்று அவர், "அந்தக் கூட்டத்துக்கு நடுவில் ஒரு பெரிய மூட்டை தெரிகிறதே; அங்கே சுமைதாங்கி இல்லையே. ஏதாவது வண்டி நிற்பதாகவும் தெரியவில்லையே. அங்கே அவ்வளவு பெரிய மூட்டை இருக்கக் காரணமென்ன?" என்று கேட்டார்.

அருகிலிருந்தவர்கள் எட்டிப் பார்த்தார்கள். ஒரு பெரிய மூட்டை கூட்டத்துக்கிடையே தெரிந்தது. கூட்டம் நெருக்கமாக இருந்தமையால் அந்த மூட்டைக்கு ஆதாரமான பொருள் இன்னதென்று தெரிந்துகொள்ள முடியவில்லை.

மந்திரிமார் அந்த மூட்டை எங்கே இருக்கிறதென்று தெரிந்துவர ஓர் ஆளை அனுப்பினர். சிறிது நேரத்தில் ஒருவன் வந்து செய்தியைத் தெரிவித்தான்; "ஒரு பிராமணர் தம் தலையில் நெல் மூட்டையைச் சுமந்தபடியே வேடிக்கை பார்த்துக்கொண்டு நிற்கிறார்" என்று அவன் கூறினான், "பிராமணரா! மூட்டை பிரும்மாண்டமானதாக இருக்கிறதே; அதை அவர் சுமந்துகொண்டே வேடிக்கை பார்ப்பதேன்?" என்று அரசர் ஆச்சரியத்தோடு கேட்டார். மறுபடியும் சமாசாரம் வந்தது; "அவர் அதைச் சிறிதும் கஷ்டமில்லாமல் சுமந்துகொண்டு நிற்கிறார். கீழே இறக்கவேண்டியது அவசியமில்லையென்று சொல்கிறார்" என்று" தெரியவந்தது.

"அத்தகைய மனிதரை நாம் பார்க்கவே வேண்டும்" என்று அரசர் உத்தரவிட்டார். அவரை அழைத்து வருவதற்காக ஒருவன் சென்றான்.

அந்தப் பிராமணர் தஞ்சாவூர் ஜில்லாவிலுள்ள ஐயம்பேட்டைக்கருகில் இருக்கும் மாங்குடியென்னும் ஊரினர். ஸ்மார்த்தப் பிராமணர்களுள் மழநாட்டுப் பிருகசரணமென்னும் வகுப்பைச் சார்ந்தவர். அண்ணாவையரென்பது அவர் பெயர். தஞ்சாவூரில் இருந்த ராஜபந்துக்களாகிய மகாராஷ்டிரர்கள் தங்களுக்குப் பக்கத்துக் கிராமங்களிலுள்ள நிலங்களைக் குத்தகைக்கு விட்டுவிடுவார்கள். அந்தக் குத்தகைக்காரர்கள் வருஷந்தோறும் நெல்லைக் கொணர்ந்து அவர்களிடம் கொடுத்துவிடுவார்கள். சிலர் தாமே சுமந்து வந்து போட்டுவிட்டுச் செல்வார்கள். அண்ணாவையர் அத்தகைய குத்தகைதாரர்களுள் ஒருவர்.

அவர் இரண்டு கலம் நெல்லை ஒரு கோணியில் மூட்டையாகக் கட்டித் தம் தலையிற் சுமந்துகொண்டு வந்தவர், அந்த வழியை செல்லுகையில் பெருங்கூட்டமொன்று இருப்பதைக் கண்டு அங்கே வந்தார். வளைவுக்குள்ளே மல்விளையாட்டு நடப்பது தெரிந்து வேடிக்கை பார்க்கும் பொருட்டு நின்றார்.

மிகவும் பலமும் கட்டுமுடைய ஆஜானுபாகுவான அவருடைய உடம்பு இரும்பைப்போன்றிருந்தது. நெற்றியில் இருந்த திருநீறும் கழுத்திலிருந்த ருத்திராட்சமும் அவருடைய சிவபக்தியைப் புலப்படுத்தின.

அவரும் அவருடைய வகுப்பினரும் சிறந்த சிவபக்தர்கள்; மூன்று காலத்தும் ஏகலிங்கார்ச்சனம் செய்பவர்கள். அண்ணாவையருடைய வன்மை பொருந்திய உடலும் சிவசின்னங்களின் தோற்றமும் பார்ப்பவர்களுக்குப் பீமசேனனது ஞாபகத்தை உண்டாக்கின. சிவபக்தியும் தேகபலமும் பொருந்தியவர்களிற் சிறந்தவன் அவனல்லவா?

அண்ணாவையார் தம் தலையிலிருந்த சுமையை ஒரு பொருளாக மதிக்கவே இல்லை. ஆதலால் அதை இறக்கி வைக்காமல் நின்றபடியே மற்போர் விளையாட்டைப் பார்த்துக் கொண்டிருந்தார். அவர் தோளில் ஒரு பை தொங்கியது. அதில் ஐந்தாறு கவுளி வெற்றிலையும் பாக்கும் ஒரு பெரிய பாக்கு வெட்டியும் தேங்காயளவுள்ள சுண்ணாம்புக் கரண்டகமும் வைத்திருந்தனர். அந்தக் காட்சியைப் பார்த்துக்கொண்டு நின்றவர் அப்படியே தாம்பூலம் தரிக்கத் தொடங்கினார்.

அவர் நின்றபடியே பையிலிருந்து பாக்குவெட்டியை எடுத்துப் பாக்கைச் சீவிச் சீவி வாயிலிட்டார். பிறகு வெற்றிலையை எடுத்தார். சுண்ணாம்பு கரண்டகத்தின் சங்கிலியிலுள்ள வளையத்தைச் சுண்டுவிரலில் மாட்டிக்கொண்டார். அதிலிருந்து சுண்ணாம்பை எடுத்து வெற்றிலையில் தடவி ஒரே தடவையில் நான்கைந்து வெற்றிலைகளின் நரம்பைக் கிழித்து அப்படியே சுருட்டி வாயிலிட்டு மெல்லத் தொடங்கினார். தலையில் ஒரு சுமை இருப்பதை உணராதவரைப் போல அநாயாசமாக அவர் நின்று கொண்டிருந்தார். அருகிலிருந்தவர்கள் மல்யுத்தத்தைப் பார்ப்பதோடு இடையிடையே அவரையும் பார்த்து வியந்தனர்.

அரசரிடத்திலிருந்து வந்த சேவகன் அவரை அணுகினான்; "மகாராஜா உங்களை அழைக்கிறார்; பார்க்க வேண்டுமாம்" என்றான்,

"மகாராஜாவா? என்னை ஏன் அழைக்கிறார்? ராஜசமுகத்திற்கு வெறுங்கையோடு போகக்கூடாதே. நான் ஒன்றும் கொண்டு வரவில்லையே!" என்றார் அந்தப் பிராமணர்

"நீங்கள் வாருங்கள். அதெல்லாம் வேண்டாம்" என்று சேவகன் சொன்னான்

"அப்படியானால் வருகிறேன்; இந்த மூட்டையை ஓரிடத்தில் இறக்கிவிட்டு வருகிறேன்" என்று கூட்டத்தை விட்டு ஓரிடத்திற்குச் சென்றார் அரண்மனை வேலைக்காரர்கள் அவர் தலையிலிருந்த மூட்டையை இறக்க முயன்றார்கள். ஒருவராலும் முடியவில்லை. அவ்வந்தணர் சிரித்துக்கொண்டே அவர்களை நகரச் சொல்லிவிட்டுச் சிறிதே தலையை அசைத்தார். அந்த மூட்டை வில்லிலிருந்து வீசிய உண்டையைப் போலத் தரையில் பொத்தென்று விழுந்தது.

"சரி, வாருங்கள்! போகலாம்" என்று அண்ணாவையார் அரசரிடம் சென்றார்.

அரசர்: நீர் எந்த ஊர்? எதற்காக இங்கே சுமையைச் சுமந்துகொண்டு நிற்கிறீர்.

அண்ணா: நான் இருப்பது மாங்குடி. இந்த நெல்லை இந்த ஊரில் ஒரு கனவானிடம் கொடுப்பதற்காகச் சுமந்துவந்தேன். இங்கே ஏதோ மல் விளையாட்டு நடக்கிறதென்று சொன்னார்கள். கொஞ்சம் பார்த்துவிட்டுப் போகலாமென்று நிற்கிறேன்.

அரச,ர் இந்த விளையாட்டில் உமக்கு அவ்வளவு சிரத்தை என்ன?

[தொடர்ச்சி 7-ம்பக்கம் பார்க்க.]

அடுத்தப்படி யென்ன?

வர்ணாச்ரம ஸங்கத்தை வலுப்படுத்தவும்.

ஸ்ரீ நடேசய்யர்வேண்டுகோள்.

அகில இந்திய வர்ணாச்ரம ஸ்வராஜ்ய ஸங்கத் தலைவரான ராவ்ஸாஹேப் ஸ்ரீமான் நடேச அய்யர் அவர்கள் வெளியிட்டுள்ள ஒரு வேண்டுகோளின் ஸாரமாவது:—

மதுரை மீனாக்ஷி கோவிலில் தாழ்ந்த ஜாதியார் பிரவேசித்ததை எதிர்த்தும், ஸம்ப்ரோக்ஷணம் நடத்தவேணுமென்றும், ஆலயப் பிரவேசச் சட்டத்தை ரத்து செய்ய வேண்டுமென்றும் நாம் பெரிய கிளர்ச்சி நடத்தி வருவது தெரிந்த விஷயம்.

இக்கிளர்ச்சியின் பயனாக சென்னையின் தற்கால கவர்ன்மெண்டார், காங்கிரஸ் மந்திரிஸபை மறைந்தபிறகு ஸ்ரீ நெல்லையப்பர் கோவில் முதலியவற்றில் ஆலயப்பிரவேசம் கூடாதென்று உத்திரவு பிறப்பித்திருப்பது தெரிந்த விஷயம். அநேகமாக ஆலயப்பிரவேசமானது இந்த உத்திரவு மூலம் தடுக்கப்பட்டதாகவே ஆகிறது.

மேலும் 11—4—40ல் சென்னை கவர்ன்மெண்டார் பிறப்பித்துள்ள ஓர் உத்திரவிலிருந்து, தாழ்ந்த ஜாதியார், ஆலயங்களில் புகும் விஷயமாக காங்கிரஸ் ஸர்க்கார் செய்த தவறை உணர்ந்திருப்பதும், அதற்குப் பரிஹாரம் தேட தற்போதைய ஸர்க்கார் கவலையுள்ளவர்களாக இருப்பதும் வெளியாகிறது.

மேற்படி 11௳ உத்திரவிலிருந்து இரண்டு அம்சங்கள் வெளியாகின்றன. முதலாவது, தாழ்ந்த ஜாதியார்கள் இந்த ஆலயப்பிரவேசத்தை விரும்பவில்லையென்ற விஷயத்தை கவர்ன்மெண்டார் உணர்ந்திருக்கிறார். தாழ்ந்த ஜாதியார் பிரவேசிக்க விரும்பாதவிடங்களில் கோவிலுக்கு ஸம்ப்ரோக்ஷணை நடந்த பிறகுதான் ஜாதி ஹிந்துக்கள் அந்தக் கோவில்களை உபயோகித்துக் கொள்ள விரும்புவதையும் ஸர்க்கார் தெரிந்துகொண்டிருக்கிறார்கள். ஆயினும் கவர்ன்மெண்டார், ஸம்ப்ரோக்ஷணை நடத்தப்பட்ட கோவில்களில் மீண்டும் தாழ்ந்த ஜாதியார் பிரவேசிக்கக்கூடாதென்று ஓர் உத்திரவு போடவேண்டியது அவசியமாகும். இதை ஞாபகப்படுத்தி ஹிந்துமதஸ்தாபன போர்டாருக்கும் ஒரு விண்ணம் செய்து கொள்ளப்பட்டிருக்கிறது.

இரண்டாவதாக, ஆலயப்பிரவேசம் நியாயமற்றதென்று சென்னை கவர்ன்மெண்டார் உணர்ந்த போதிலும்கூட, ஒரு மந்திரிஸபை செய்த கார்யத்தை ரத்து செய்வது மரியாதையாயிருக்காதென்ற சஞ்சல எண்ணத்தாலேயே அவர்கள் தயங்குவதாயும் 11௳ உத்திரவிலிருந்து தெரிய வருகிறது, ஆயினும் சட்ட விரோதமான கார்யம் ஏற்கனவே செய்யப்பட்டிருக்கையில் அதற்கு ஆதரவு கொடுப்பது இரண்டாவது தவறுதலாகாதா? ஆகையால் கவர்ன்மெண்டார் சட்ட புஸ்தகத்திலிருந்து இந்தச் சட்டத்தை ரத்து செய்ய அவசியமான நடவடிக்கை எடுத்துக் கொள்ளுவதே நியாயமாயிருக்கும்.

இதற்காக நாம் செய்யவேண்டிய அவசரவேலை யென்ன வென்றால், ஸநாதநிகள் ஒவ்வொரு இடங்களிலும் தவறாமல் வர்ணாசரம ஸ்வராஜ்ய ஸங்கங்களை அமைக்கவேணும். ஒவ்வொரு ஊரிலும் இருக்கும் காங்கிரஸ் மெம்பர்களைவிட அங்கு நமது ஸங்க மெம்பர்கள் அதிகமாயிருக்கும்படி மெம்பர்களைச் சேர்க்கவேணும். மதுரையில் இப்போது கிட்டத்தட்ட காங்கிரஸ் மெம்பர்களைவிட நமது வர்ணாச்ரம ஸ்வராஜ்ய ஸங்கத்திற்கே மெம்பர்கள் அதிகமாயிருக்கின்றனர். இந்த வழியில் முயற்சி எங்கும் செய்யவேணும். தவிர நாம் புதிய பலமுள்ள ராஜீயக் கக்ஷியாக இருந்து வேலை செய்யவேணும். நமதுகக்ஷி, மற்ற ராஜீய கக்ஷிகளை அமுக்கக் கூடியதாக இருக்கவேணும். நமக்கும் ஸ்வராஜ்யமே வேணும். ராஜீய, பொருளாதார விஷயங்களில் நமக்கு ஸ்வேச்சை வேண்டியதுதான் ஸமூஹ மதவிஷயங்களில் பிரவேசிக்காமல் நடு நிலைமைக் கொள்கையுடன் கூடிய ஸ்வராஜ்யம் நமது லக்ஷ்யமாயிருக்கும். இந்த வழியில் நாம் ஒவ்வொருவரும் வேலைசெய்வது கடமையாயிருக்கிறது.

(3-ம் பக்கம் தொடர்ச்சி)

கவும், திரவ்யம் ஸம்பாதிக்க அரசனை ஆச்ரயிப்பதும் நியாயமென்று இதில் யாக்ஞவல்க்யர் சொல்லுவதும் கவனிக்கத்தக்கது, வற்றொரு விடத்திலும் யாக்ஞவல்க்யர், பிராம்மணனின் நித்ய கர்மங்களைச் சொல்லி விட்டு

उपेयादीश्वरंचैव योगक्षेमार्थसिद्धये । (ஆ 100)

என்பதால் பிராம்மணன் பிரதி தினமும் தனது நித்யகர்மங்களை முடித்துக்கொண்ட பிறகு, தனது குடும்பயோக க்ஷேமத்தின் பொருட்டு அரசனை அனுகவேணும் என்று சொல்லியிருக்கிறார்.

ஆபத்காலத்திலும் விலக்கவேண்டியவைகள்

பிராமணனுக்கு ஆபத்காலத்தில் வைச்ய வ்ருத்தியை அவலம்பித்து சில பொருள்களை வியாபாரம் செய்து ஜீவிக்க அனுமதியிருந்தபோதிலும் கீழ்கண்ட பொருள்களை ஆபத் காலத்தில் கூட பிராம்மணன் விற்பனை செய்யக்கூடியதென்று யாக்ஞல்க்யர் பிராயச்சித்தாத்யாயத்தில் தடுக்கிறார் (பிரா—36-38).

பழங்கள், கற்கள் அதாவது மணி மாணிக்யாதிகள், க்ஷௌம—ஒருவித பட்டு வஸ்த்ரம், ஸோமலதை, மனிதன், பக்ஷணங்கள் பிரம்பு முதலியய கொடிகள், எள்ளு, அன்னம், வெல்லம், கரும்பு, முதலியவை, தயிர்-பால், நெய், ஜலம், ஆயுதம், சாராயம், மெழுகு, தேன், அரக்கு தர்ப்பம், மண், தோல், புஷ்பம், கம்பளம், மயிர், மோர், விஷம், பூமி, நீலி, உப்பு, மாம்ஸம் பிண்ணாக்கு முதலிய பொருள்களை ஆபத்காலத்திலும் பிரரமணர் ஜீவனத்திற்காக வியாபாரம் செய்யக்கூடாது. இவைகளில், உப்பு, மாம்ஸம் முதலியவைகளின் வியாபாரத்தினால் பிராம்மணன் பதிதனாவான். தயிர், பால் முதலியவைகளின் வியாபாரத்தினால் தாழ்ந்த நிலைமை அடைவான். இவ்வாறு ஸ்மிருதிகளில் பிராம்மணர்களுக்கு ஆபத்காலத்தில் செய்யக்கூடிய தொழில்கள் உபதேசிக்கப்பட்டிருக்கையில் இந்தக் கொடிய கலியின் தாண்டவ ஸமயத்தில் பிராமணர்கள் தடுக்கப்படாத தொழில்களால் ஜீவனம் செய்வது முற்றிலும் சாஸ்திரமும் மதமாகும். அதனால் பிராம்மணயத்திற்கும் குறைவு ஏற்படாது.

எந்தத்தொழில் செய்தாலும் பிராள்மணன் தனது நித்யநைமித்திர தர்மங்களை அந்தந்தக் காலங்களில் அனுஷ்டித்துத் தீரவேண்டியது கடமையாகும். ஆபத்கால்ம் நீங்கி குடும்பத்தில் ஸௌகர்யமேற்பட்ட பிறகு ஆபத்காலத்திற்காக அவன் செய்து வந்த தொழிலைவிட்டு விடவேண்டியதும் அவச்யமென்று யாக்ஞவல்க்யர் கண்டிப்பா விதிக்கிறார்.

ராஜாங்கம் அண்ணாவைய்யர்

[6-ம் பக்கத் தொடர்ச்சி]

அந்தணர்: எங்களுக்கும் மல் விளையாட்டு தெரியும். யாரோ வடநாட்டான் வந்திருக்கிறானென்று கேள்விப்பட்டேன்- அவன் எப்படி விளையாடுகிறானென்று பார்க்கலாமென்றுதான் நின்றேன்,

அரசர்: எப்படியிருக்கிறது விளையாட்டு?

அந்தணர்: என்னவோ நடக்கிறது! இந்த மனுஷ்யனை இவ்வளவு பேர் கூடிக்கொண்டு பிரமாதப்படுத்துகிறார்களேயென்று எனக்குச் சிறிப்பு வருகிறது.

அரசர்: அந்த வீரன் பல தேசங்களுக்குச் சென்று பலபேரை ஜயித்தவனென்பது உமக்குத் தெரியாதோ?

அண்ணா: இவனா! எங்கள் ஊரிலுள்ள ஒரு பொடிப்பையனுக்கு இவன் ஈடுகொடுக்கமாட்டான். என்னவோ அதிர்ஷ்டம் அடித்திருக்கும்; சில இடங்களில் பலஹீனர்கள் அகப்பட்டிருப்பார்கள்; ஜயித்திருக்கலாம்.

அரசர்: அப்படியானால் இவனை ஜயிப்பது சுலபமென்றா எண்ணுகிறீர்?

அண்ணா: ஜயிப்பதா? ஒரு நிமிஷத்தில் இவனைக் கியாகியாவென்று கத்தும்படி பண்ணிவிடலாமே.

அரசர்: நீர் மல் யுத்தம் செய்வீரா?

அண்ணா: பேஷாகச் செய்வேன்.

அர: இவனோடு இப்போதுசெய்யமுடியுமா

அண்ணா: மகாராஜா உத்தரவிட்டால் செய்யத் தடையில்லை-

அரசர்: அதற்குவேண்டிய உடுப்பு ஒன்றும் இல்லையே; சட்டை, சல்லடம், வஜ்ர முஷ்டி முதலியவை வேண்டாமா?

அண்ணாவையர் சிரித்தார்! அவைகளெல்லாம் அநாவசியம். வேஷ்டியை வரிந்து கட்டிக்கொண்டு இவனுக் குமுன்னே நின்றால் அடுத்த நிமிஷமே இவன் மண்ணைக் கவ்விக் கொள்வதில் சந்தேகமில்லை'' என்றார்.

(தொடரும்)

கலைமகள்

Books by

T. R. GANAPATHIRAMA IYER, B.A., B.L.,

1 Condensed Bagavatham Tamil.	Rs.	2	8	0
2 Do with Slokas and English.	,,	2	0	0
3 Life after Death Part I The Hindu view and Part II Conquest of Deaths its fears by Yogic methods.	,,	2	8	0

Copies can be had of :—

THE ARYA DHARMAM OFFICE,
T. H. S. Road, Kumbakonam.
or
G. SUBRAMANIA & Co.,
Tinnevelly Jn.

லலிதாத்ரிசதீ

நாகரலிபியில் மூலமும்,
நாமாவளியும் விலை 0—3—0

ஸ்ரீ லலிதா

ஸஹஸ்ரநாமம்

நாகரலிபியில் மூலமும்,
நாமாவளியும். விலை அணா 0—5—0
ஆர்யதர்மம் சந்தாதாரர்களுக்கு
விலை அணா 0—4—0.
தபால்சிலவு அணா 1.

கிடைக்குமிடம்:—
ஸ்ரீஜனார்தன பிர்ண்டிங் ஒர்க்ஸ் லிமிடெட்,
கும்பகோணம்

போலிகள் ஜாக்கிரதை!

அமிர்தாஞ்சனம்

எல்லா வலிகளுக்கும் துன்பங்களுக்கும் கைகண்ட இந்தியமருந்து இதுவே.

ஆயிரக்கணக்கானவர்கள் விற்கிறார்கள்

* * *

அமிர்தாஞ்சன் லிமிடெட்,

படை மருந்து

தேம்பல், படை முதலிய வியாதிகளைத் தீர்க்கும்.

தஞ்சை

ஸ்ரீ காமாக்ஷி அம்மன் தேவாலயம்

தஞ்சை ஸ்ரீ பங்காரு காமாக்ஷி அம்மன் தேவஸ்தானம் சென்ற 1924ம் வருஷமுதல் முயற்சி எடுத்து தற்காலம் நமது மானேஜிங் டிரஸ்டி ஸ்ரீ டி. எஸ். வெங்கட்டராம அய்யர் அவர்கள் விடாமுயற்சியினாலும் அவர்களது வேண்டுகோளுக்கிணங்கி ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள் ஷ்டி ஆலயத்தின் திருப்பணி செய்து கும்பாபிஷேகம் செய்து பக்தர்களை அனுக்கிரகிக்க முன் வந்திருக்கிறார்கள். நாளது 1940 வருஷம் ஜனவரி மாதம் 29உ திங்கள்கிழமை காலை 7 மணிக்கு வேலை ஆரம்பமாகியது. என்று டிரஸ்டிகளால் அறிவிக்கப்படுகிறது.

ஹிந்து தர்ம ஸித்தாந்த ஸபா புரசைபாக்கம்

இந்த சபாவின் தைமீ 8உ மாலை நடந்த கூட்டத்தில் ஏற்பாடு செய்த முக்கிய கொள்கை.

1. நம் ஸனாதன தர்மத்தை மேன்மேலும் விருத்தி செய்தல். 2. மாதாமாதம் நம் தலைவர்களைக்கொண்டு உபன்யாஸம் ஏற்பாடு செய்தல். 3. இந்து மத சம்பந்தமான புஸ்தகங்களை வரவழித்து வாசகசாலை ஏற்பாடு செய்தல். 4. ஸ்திரீ புருஷ பாலர்களுக்கு அவரவர் மத கொள்கைபடி ஸ்தோத்திரங்களைச்சொல்லிக்கொடுக்க ஏற்பாடு செய்தல். 5. நம் சபா மெம்பர்கள் எல்லோரும் மாலை 6 மணிக்கு சைதாபேட்டை பெருமாள் சந்நிதியில் ஸஹஸ்ரநாம பாராயணம் செய்தல். 6. காப்பி குடியை கூடியவரையில் ஒழித்தல். 7. சினிமாவுக்கு போகாமல் ஜனங்களை கேட்டுக்கொண்டு அதனால் ஏற்படும் கெடுதிகளை எடுத்து சொல்லுதல். 8. மதாசார்யார்களை தூஷிக்கும் அவிவேகிகளைக் கண்டித்தல். 9. நம் சிறுவர்களுக்கு நல்ல ஒழுக்கங்களை கற்றுக்கொடுத்தல். 10. நம் ஸனாதன பத்திரிகைகளை வரவழித்தல்.

சை. ந. கிருஷ்ண பட்டாசாரி.

ஸ்ரீ N.E. வெங்கடேச சர்மா எழுதியது.

ஸம்ஷ்கிருத ஸ்வபோதினி	1	0	0
கிரந்த தமிழ் அகராதி	5	0	0
ஸம்ஸ்கிருத தமிழ் அகராதி	2	8	0
தமிழ் ஸம்ஸ்கிருத அகராதி	1	0	0

கிடைக்குமிடம் :— ஜனார்த்தன அச்சுக்கூடம், கும்பகோணம்

பழுவூர்

கீர்வாண வாணீ பரிஷத்

21-1-40 ஞாயிறு மாலை 4 மணிக்கு மேலே கண்ட பரிஷத்தின் கூட்டம் பழுவூர் வேத பாடசாலையில் ஸ்ரீபழமார்நேரி பி. கே சுப்பிரமணிய சாஸ்திரிகள் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அவ்வமயம் தலைவராலேயே பக்தி என்னும் விஷயம் விஸ்தாரமாக உபன்யஸிக்கப்பட்டது. பிறகு கார்ய தரிசியால் வந்தனோபசாரம் கூறப்பட்டு ஸபை இனிது கலைந்தது. ந. நி.

மணக்கால்

ஒரு வயோதிக ஸதீயின் மரணம்

லாலுகுடி தாலுகா மணக்கால் கிராமத்தில் ஸோமயாஜி ப்ரம்மஸ்ரீ நாணு தீட்சிதரின் தர்ம பத்னியும், சிரௌத ஸ்மார்த்த தர்ம சாஸ்திர நிபுணர் சிரௌத ரத்னம் ப்ரம்மஸ்ரீ எம். என். முத்துதீட்சிதரின்மாதாவுமான சேஷாம்பாள் அம்மாள் தனது 94-வது வயதில் பிரமாதி வருஷம் தைமீ 8உ சுக்லபட்சதுவாதசியன்று பகல் 4 மணிக்கு சிவஸாயுஜியத்தை அடைந்தாள். மறு தினம் இதர புத்ரர்களான வைத்தி தீட்சிதர், ராமஸ்வாமி தீட்சிதர், எம். என். ராகவ சாஸ்திரிகள் யாவரும் வந்த பிறகு காலை 8 மணிக்கு ஆஹிதாக்னி ஸம்ஸ்கார கிரியைகள் வெகு விமரிசையாய் நடந்தன. மேற்படி சேஷாம்பாள் தன்மிருதி பரியந்தம் இந்திரியங்களில் ஒருவித குறைவுமில்லாமல் அகஸ்மாத்தாய் அனாயாசமாய் சிவஸாயுஜ்யத்தை அடைந்ததை நோக்குங்கால் அது அவளுடைய ஜன்மாந்திர சுகிருதத்தைப் பிரகாசப்படுத்துகிறது என்பதில் சந்தேகமில்லை.

எம்.வைத்தீஸ்வரன்.

யுத்த முனையில் தேவதை தோற்றம்!

பின்லந்து சைன்யங்கள் தங்கியிருக்கும் போர் முனையில், வெள்ளையுடை தரித்த ஓர் தேவதை தோன்றியதாம். ஸோல்ஜர்கள் அந்த தேவதையைப்பார்த்தார்களாம். அந்த தேவதை பின்லந்து சைன்யங்களைக்கட்டியணைத்து அனுக்ரஹம் செய்யும் முறையில் தோன்றியதாம்.

மதிப்புரை

(நல்லிச்சேரி அருணாசல சாஸ்திரிகளின் வெளியீடுகள்)

1 சிவநாமஸ்மரண மஹிமையும் :— சிவபூஜா கால நியமும்.

இது டிம்மி 1க்கு 16சைஸ் பாகெட் எடிஷன், புருஷார்த்த போதம் முதல் அத்யாயத்திலுள்ள சிவநாமஸ்மரண மஹிமை, பிரகரணத்திலுள்ள60 ச்லோகங்கள் கிரந்த லிபியில் மூலமும் தமிழ்மொழி பெயர்ப்புடன் கூடியது சைவ மதாபிமானிகளால் இச்சிறு நூல்பொன்னே போலப்போற்றக்கூடியது சிவதத்வஸுதா நிதி யென்ற கிரந்தம் 18 நாமஸ்மரண மகிமையை விளக்கும் 71 ச்லோகங்களும் அரிய தமிழ்மொழிபெயர்ப்பும் அமைக்கப்பெற்றிருப்பது மிகவும் போற்றத்தக்கதே. இதில் பல தத்வங்கள் அடங்கியிருக்கின்றன. ஒவ்வொரு பக்தர்களும் படித்துத் தெரிந்துகொள்ளவேண்டிய விஷயங்கள் பல உண்டு. போதாயனர் யாக்ஞவல்க்யர் முதலிய முனிவர்களால் நிர்ணயிக்கப்பட்ட ஸித்தாந்தங்களையும் 22 ச்லோகங்களில் நூலாசிரியர் ஸங்கிரஹித்திருக்கிறார். ஆசிரியர் சிரமம் பாராட்டுதற்குறியதே. அழகிய கிரந்த லிபி விலை அணா (0—3—) மூன்று.

2 ஸ்ரீ ராமாவதார கட்டம் ஸ்ரீமத் வால்மீகி ராமாயணத்திலுள்ள 32 ச்லோகங்கள் அடங்கியது அழகிய தமிழ் மொழிபெயர்ப்புடன் விளங்குகிறது. அர்த்தம் தெரிந்துகொண்டு ஸ்ரீ ராமாவதார கட்டம் பாராயணம் செய்பவர்களுக்கு மிகவும் உபயோகமானது. பாரத ச்லோகங்கள் இருக்கின்றன. இதை வாங்கி ஒவ்வொரு மாணவர்களிடம் கொடுத்து பாராயணம் செய்யும்படி செய்ய ஆஸ்திகாபிமானிகள் முன்வந்தால் தத்காலத்திய மாணவர்களுக்குத் தெய்வ பக்தி அதிகமாய் விருத்தியடையுமென்பதில் சந்தேகமில்லை. இதின் விலை (0—2—0) தபால் செலவு தனி. வேண்டியவர்கள் ஜம்புநாத சாஸ்திரி நல்லிச்சேரி அய்யம் பேட்டை அல்லது ஸ்ரீ ஜனார்தந அச்சுக்கூடம் டவுன் ஹை ஸ்கூல் ரோடு, கும்பகோணம் என்ற இடத்திலாவது பெறலாம்.

மேலக்காவேரி

கே. ஆர். வைத்தியநாத சாஸ்திரி.

Printed by S. Kalyanasundaram at the Sri Janardhana Printing Works, Ltd., Town High School Road, Kumbakonam,
Published by A. Gopaladesikachariar and S. Kalyanasundaram.